

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா



ஒளி - 12 காலாண்டிதழ் ஏப்ரல் - ஜூன் 2018 கதிர் - 2


# வெண்ணிலா தந்த விண்ணுலக தேவதை!



**அது** ஓர் இதமான பதமான மகிழ்ச்சி தரும் குளிர்காலம். மொட்டை மாடியில் படுத்து கொண்டு வானத்தை நோக்கினேன். விண்மீன்கள் கண்சிமிட்டி கொண்டு இருந்தன. சந்தோரதயம் எப்பொழுது வரும் என்று காத்து கொண்டு இருந்தேன். வானத்தில் வெண்ணிலவு மிதந்து வராதா? அந்த நிலவொளியில் நாம் காய மாட்டோமா என்று எண்ணம் நிலவியது. வெண்ணிலாவை பெண்ணோடு தான் ஒப்பிடுவார்கள். ஏனென்றால் சந்திரன் ஒரு பெண் கிரகம் ''முகம் அது சந்திர பிம்பமோ'' என்று வட்ட வடிவமான முகம் கொண்ட பெண்ணை கவிஞர்கள் வர்ணிப்பார்கள். வானம் நிலவை பார்த்து என்னை தொடாதே என்று சொல்ல முடியாது. பூமிக்கு உபயோகமாக இருந்து உபாயங்களை தந்து மனதிற்கு மகிழ்ச்சி தரும் கிரகம் தான் சந்திரன். ஜாதகத்தில் சந்திரன் உச்சமாகவோ பலமாகவோ இருந்தால் அவர்களது அறிவு கூர்மையும் கவிதிறமையும் பிரமாதமாக இருக்கும். அவரே ராகு கேதுவோடு சம்பந்தப்பட்டு இருந்தால் மனதில் குழப்பமும், மனதில் கோளாறும், நினைவாற்றலும் கெட்டு போகும். ஆகையால் தான் மனதிற்கும் சந்திரனுக்கும் தொடர்பு இருக்கிறது. முழு நிலவை பார்க்கும்போது இனம் புரியாத வர்ணிக்க இயலாத பெருமகிழ்ச்சி நம் உள்ளத்தில் தோன்றுகிறது. வளர்ந்தாலும் தேய்ந்தாலும் நிலவு அழகுதான். ஆகையால் தான் மனநிலை பாதிக்கப்பட்ட சில அன்பர்களுக்கு வளர்பிறையில் சரியாக இருப்பதும், தேய்பிறையில் சரியில்லாமல் இருக்கும் சூழ்நிலையும் உருவாகுகிறது. வளர்பிறையில் வரும் 3ம் பிறையை பார்க்கும் பொழுது எல்லாம் வல்ல உலக இயக்கத்தை நடத்திகொண்டு பிறையணி பரமேஷ்வரனின் ஞாபகம் வருகிறது.

முழு நிலவை பார்க்கும்போது உலகத்தின் தாயாக விளங்கும் அம்பிகையின் ஞாபகம் வருகிறது. அது சரி எதற்காக நிலவை இப்படி வர்ணிக்கிறீர்கள் என்ற எண்ணம் உங்களுக்கு தோன்றலாம். நிலவுக்கு எனக்கும் உள்ள தொடர்பு, அதன் மூலம் ஆலயத்திற்கும் எனக்கும் உள்ள தொடர்பு தான் 1975 ஆம் ஆண்டு ஒரு முழுமதி நாளில் (பௌர்ணமி) எனது ஸ்ரீ வித்யா குரு திருமதி விசாலாட்சி சுவாமிநாதன் அவர்கள் இல்லத்துக்கு பௌர்ணமி பூஜைக்கு நான் சென்று இருந்தேன். ஸ்ரீ வித்யா முறைப்படி நவாவர்ண பூஜை செய்பவர்கள் அவர்கள். லலிதாம்பிகையை அழகாக அலங்கரித்து தம்பதிகளாக அவர்கள் பூஜை செய்யும் அழகே அழகு. அதுவும் முழு மதி நாளில் மனதிற்கு மகிழ்ச்சி தரும் மதிஒளியில் அந்த பூஜையை பார்க்கும் பொழுது அழகுக்கு அழகு சேர்ப்பது போல் இருந்தது. அப்பொழுது ஓர் அதிர்வு அலை என்னுள் ஏற்பட்டது. நாமும் ஏன் சாதாரண முறையில் பௌர்ணமி பூஜை செய்ய கூடாது என்று தோன்றியது. அடுத்து வரும் பௌர்ணமி அன்றே பூஜையை ஆரம்பித்தேன். காஞ்சி காமாட்சி அம்மனை பிரதானமாக வைத்து அடியேன் பிறந்த ஊராம் சுக்ர ஸ்தலமான கஞ்சனூரில் தொடங்கினேன். எனது தாய் தந்தையரின் ஆசிகளோடு அடியேனின் தாய் சரஸ்வதி அம்மாள் மூலமாக அம்பிகை இறங்கி பேசி அருளாசிகளை வழங்கி பூஜையை அலங்கரித்தாள். தொடர்ந்து பௌர்ணமி பூஜை பல இன்னல்களுக்கு நடுவே நடந்து கொண்டே இருந்தது. உள்ளூரில் இருந்தாலும் வெளியூரில் இருந்தாலும் பூஜை தொடர்ந்தது. இந்த கால கட்டத்தில்தான் பிரபஞ்ச குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அடியேனை வழிகாட்டுவர்கள் குருவாக இயங்குவார்கள் என்று அம்பிகையிடம் இருந்து ஆணை கிடைத்தது. சத்குருவோடு பேசும் பெரும் பாக்கியம் கிடைத்தது.

வழிகாட்டுதல் கிடைத்தது. தங்க பாதுகை மலர்ந்தது. பாதுகை பூஜை நடந்தது. எங்கோ இருந்த என்னை உச்சத்தை நோக்கி ஸத்குரு அழைத்து கொண்டு செல்கிறாரே! அவருக்குதான் ஆலயம் எழுப்ப வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவரிடம் கேட்டேன். ஆனால் ஸத்குரு நாதர் ஆலயம் இப்படிதான் இருக்க வேண்டும். 18 சித்தர்களோடு உலகநாயகி அம்பிகையை மையமாக வைக்கவேண்டும் என்று வரைப்படத்தின்மூலம் விளக்கினர்கள். 18 சித்தர்களின் பெயரையும் பூஜை முறைகளையும் உபதேசித்தார்கள். அதன் பயனாக தான் பல அன்பர்களின் ஒத்துழைப்போடும், உழைப்போடும் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் அறக்கட்டளையின் சார்பில் மாடம்பாக்கத்தில் சபரிவார ஸ்ரீ சக்ர மஹாமேரு பிருந்தாவனம் உருவாக்கப்பட்டது.

மொட்டை மாடியில் நான் படுத்து ஏங்கி தவித்த சந்தோரதயம், வெண்ணிலா மிதந்து வந்து விண்ணுலகத்தில்இருந்து அழைத்து வந்த இந்த லலிதாம்பிகை அருள்பாலித்த கொண்டு இருக்கிறாள். வெண்ணிலா தந்த தேவதை அல்லவா! அவள்! அடியேனுக்கு தந்த உள்ள குளிர்ச்சியை மனமகிழ்ச்சியோடு உங்களுக்கும் தருவாள்.

வாருங்கள்! வணங்குவோம்! வழிபடுவோம்!

வளங்களை பெறுவோம்!

குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில்
சந்தாதாரராகி
ஸத்குருவின்
திருவருள் பெறுங்கள்

சந்தா
ரூ. 101/-

# நமது சித்தர் பீடத்திலும் குருவாயூர் கிருஷ்ணன்

''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்
ஸ்ரீ சேஷாத்ரி குரும்வந்தே பிரம்மீபூதம் தபோநிதம்''



பெருமதிப்பிற்குரிய சேஷ பக்தர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கம். மீண்டும் இந்த இதழில் உங்கள் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

குருவாயூரில் அமர்ந்து குவலயத்தின் குறைகளை எல்லாம் தீர்க்கும் கோமகன் குருவாயூரப்பனைப் பற்றி சில விஷயங்களை பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறனே்.

குருவாயூர் கிருஷ்ணன் குருவாயூரில் மட்டுமல்ல இதோ இங்கே நமது மாடம்பாக்கம் பதினென் சித்தர் சக்திபீடத்தில் குருவாயூரில் அமைந்துள்ள ஆலயத்தைப் போலவே ஆலயம் அமைந்து அதனுள்ளே வீற்றிருக்கிறான்.

இடைநாழி கண்ட ஈடில்லா பெருமான்
உறை ஆழி கொண்ட உலகாளும் திருமான்!
புவிவாழும் மாந்தர் மனம்வாழும் அம்மான்!
புதிராக நின்று வழிகாட்டும் எம்மான்!

புகழ் தன்னைப் பாட எனக்கு ஒரு ஜென்மம் போதாது. குருவாயூர் ஆலயத்தில் கண்ட இடைநாழியை நம் பதினென் சித்தர் சக்திபீட ஆலயத்திலும் கொண்டுள்ளான். குருவாயூர் கிருஷ்ணன் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அருளால் இப்பதினென் சித்தர் சக்திபீடம் அமைய முக்கிய காரணகர்த்தாவே குருவாயூர் கிருஷ்ணன்தான். அதனால்தான் குருஜி கே.வி.எல்.என். சர்மா அவர்கள் இப்பதினென் சித்தர் சக்திபீடத்தில் குருவாயூர் கிருஷ்ணன் ஆலயம் அமைய மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டு குருவாயூரில் அமைந்துள்ள ஆலயத்தின் சிறிய வடிவாக அச்சு அசலாக அதைப்போலவே நிர்மாணித்துள்ளார்கள். கும்பம், கூரை, கோணம், சிற்பங்கள், சுவரிலுள்ள வண்ணச் சித்திரங்கள் இவையனைத்தும் குருஜி அவர்களின் மேற்பார்வையில் மிகுந்த பொருட்செலவோடு ஆசைஆசையாக கட்டிய ஆலயம் இது. அடி முதல் நுனி வரை என்று சொல்வார்களே! அதுபோல அஸ்திவாரம் முதல் ஆகாய பந்தம் வரை அடிபிறழாமல் அமைந்த ஆலயம் இது. பலருக்கு இது தெரிவதில்லை காரணம் தெய்வத்தை வழிபட்ட உடனேயே கிளம்பிச் சென்று விடுவது நேரமின்மையினால். ஆனால் எந்தவொரு கோவிலுக்கு நாம் சென்றாலும் தெய்வத்தை மட்டும் வழிபட்டு விட்டு வந்து விடாமல் ஆலயத்தை சுற்றியுள்ள வேலைப்பாடுகள், ஆலய அமைப்பு, வண்ணச் சித்திரங்கள் அனைத்தையும் நேரம் ஒதுக்கி நின்று நிதானமாக ரசித்து வழிபட வேண்டும்.

ஏனென்றால் அவ்வளவு ரகசியங்கள் அதனுள்ளே அமைந்துள்ளன. அதுபோலவே நம் பதிணெண் சித்தர் சக்திபீட குருவாயூர் கிருஷ்ணன் ஆலயத்திலும் பல ரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன.

ரகசியம் அறிந்து வழிபட்டால் பலன் அதிகம். கிருஷ்ணன் சந்நதிக்கு எதிரில் பிருந்த சன்னதி உள்ளது. அதனுள்ளே அளப்பரிய ரகசியம் உள்ளது.

கிருஷ்ணனையும் துளசிதேவியையும் சேர்ந்து வழிபட தீராத வினைகள் நீங்கும். துயரங்கள் அகலும். செல்வங்கள் சேரும் நினைத்த இடத்தில் நினைத்த மாத்திரத்தில் அருள்பவன் கிருஷ்ணன் விளையாட்டுபிள்ளை. அவன் நம்மோடு விளையாடினால் நம் சந்ததி செழிக்கும் சகலமும் கை கூடும். பதிணென்சித்தர் சக்திபீட அறங்காவலர் ரவிசங்கர் ரசித்து ரசித்து குருஜி அவர்களின் வழிகாட்டுதலோடு குருவாயூர் கிருஷ்ணன் ஆராதிப்பார். அவரைப் போலவே ஆராதிக்க வாருங்கள் சேஷபக்தர்களே!

சேஷாத்ரி ஸ்வாமிகளுக்கு தங்கக்கை மகான் எனப் பெயர் வர காரணகர்த்தாவாக இருந்த காருண்ய மூர்த்தியல்லவா கிருஷ்ணபகவான் கேரள பெருமக்களே!

சகோதர, சகோதரிகளே! வாருங்கள்! வந்து வழிபடுங்கள். வாரி வாரி வழங்கும் வள்ளலிடமிருந்து அருள் அள்ளிச் செல்லுங்கள். பதிணென் சித்தர் சக்திபீடம் தழைத்து வளர்ந்து சமூக சேவை செய்ய, குருஜியின் கரங்களை வலுப்படுத்த நிதியுதவி அள்ளித் தாருங்கள் என தாழ்மையோடு கேட்கிறேன்.

மீண்டும் அடுத்த இதழில்
உங்களை சந்திக்கிறேன்

மருதபரணி

## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

**ஏப்ரல் 2018**

| | |
|---|---|
| 10 | ராஜகாளியம்மன் திருமாங்கல்ய பாக்ய திருநாள் |
| 13 | சக்திபீட கணபதி பிரதிஷ்டா தினம் பிரதோஷம் |
| 14 | தமிழ் வருடப் பிறப்பு (விஷு புண்ய காலம்) குருஜி அவர்கள் மாலை 5.45 மணிக்கு தமிழ்வருட பிறப்பின் பலன்களை கூறுவார் (பஞ்சாங்க படனம்) |
| 15 | அமாவாசை |
| 18 | அக்ஷய திரிதியை |
| 27 | ஹஸ்தம் |
| 29 | சித்ரா பௌர்ணமி அகண்ட 18 சித்தர்கள் வேள்வி, சித்ரகுப்தர் பூஜை (காலை 8.00 மணியிலிருந்து 6.00 மணி வரை) |

**மே**

| | |
|---|---|
| 15 | அமாவாசை |
| 25 | ஹஸ்தம் |
| 28 | வைகாசி விசாகம் |
| 29 | பௌர்ணமி |

**ஜூன்**

| | |
|---|---|
| 13 | அமாவாசை |
| 20 | வருஷாபிஷேகம் ஆனி திருமஞ்சனம் |
| 21 | ஹஸ்தம் |
| 27 | பௌர்ணமி |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
அமைந்துள்ளது.
முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408, 22280407,
29710972, 8754486723
பாலாலயம் : 2228 1337
பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
குரோம்பேட்டையிலிருந்து S3, S10 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்


## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.


ஸ்ரீ சேஷ ஒளி
நம்பிக்கை, தன்னம்பிக்கை, மூடநம்பிக்கை

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505



## பசு மடம்

பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசுபராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள். பதிணென் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.
விபரங்களுக்கு : 044- 24938734, 24953793 கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.

# ராசி பலன்கள்

# ஏப்ரல் - ஜூன் 2018

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை (முதல் பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிகிறார். அஷ்டமத்து சனி விலகிவிட்டது புதுமனை புகுவிழா நடக்கும். திருமணத் தடை நீங்கும். காதல் கைக்கூடும். வியாபாரிகள் தொழில்அதிபர்கள் ஜூன் முதல் வாரத்தில் இருந்து நல்ல பலன்களே நடக்கும். கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் வீண் பிரம்மைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். பணியாளர்கள் பணவிஷயத்தில் கவனத்துடன் இருப்பது நல்லது. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைக்காடர், புதன்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 9-ம் இடத்தில் சஞ்சரிகிறார். குருபகவான் நல்ல இடத்தில் இருக்கிறார். சுபநிகழ்வுகள் ஏற்படும் காதல் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். சொத்து சேர்க்கை ஏற்படும் வியாபாரிகள் தொழில்அதிபர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். வெள்ளிதிரை கலைஞர்களுக்கு பெருத்த பணவரவு உண்டு. மானவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். பித்ருராஜித சொத்துக்களால் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் உண்டு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், வெள்ளிக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிறு, ராகு காலம். சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி, 28 முதல் தேதி 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். புதுமனை புகுவிழா நடக்கும். சொத்துக்கள் வாங்கும்போதுகவனம் தேவை. காதல் - திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு மனதிற்கினிய நிகழ்ச்சி நடக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு திடீர் நல்ல திருப்பங்கள் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ராகுகாலம், ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. அஷ்டம சனியின் ஆதிக்கம் அதிகம் உள்ளது. திருமணம் தாமதப்படும். காதலில் சிககல் ஏற்பட்டு விலகும். பிரயாணத்தின் போது விபத்துக்கள் ஏற்படலாம் எச்சரிக்கை! ஏற்றுமதி இறக்குமதி. கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள் தொழில்அதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய திருப்பம் மகிழ்ச்சியை கொடுக்கும். மாணவர்கள் அலட்சியம் இல்லாமல் படித்தால் அதிக மதிப்பெண் பெறலாம். விவசாயிகளுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் ஆபத்து உண்டு எச்சரிக்கை! பணியாளர்கள் வேலையை அவசரப்பட்டு மாற்ற வேண்டாம். நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். 6-ல் குரு இருக்கிறார். அஷ்டமத்தில் சனி இருக்கிறார். உடல் நலததில் கவனம் தேவை. எங்கும் எதிலும் நிதானம் தேவை. வியாபாரிகள் தொழில்அதிபர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். கலைஞர்கள் பிரயாணத்திணன்போது கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் கடும் முயற்சி எடுத்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். விவசாயிகளுக்கு எந்திர பழுதுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகளுக்கு உடன்பிறப்புகளால் தொந்தரவு உண்டு. பணியாளர்களுக்கு மருத்துவ செலவுகள் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சாதாரணமாகவே இருக்கும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், செவ்வாய்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி, 30ம் தேதி முதல் 1 ஜூன் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டம சனியால் மனதில் வீண குழப்பங்கள் ஏற்படும். சில அன்பர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். அவசரம் கூடாது. கலைஞாகளுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். மாணவாகள் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். விவசாயிகளுக்கு உடனபிறப்புகளால் தொந்தரவு உண்டு. நிதானத்தை கடைபிடிக்கவேணடும். அரசியல்வாதிகள் சொத்து வாங்கும்போது கவனம் தேவை. பணியாளர்கள் உடல நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். பொதுவாக நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 298 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். மனதில் வீண குழப்பம் நீங்கும். வியாபாரிகள் தொழில்அதிபர்கள் ஓரளவு லாபம் அடைவர்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. மாணவர்களுக்கு எதிர்பார்த்த அளவில் முன்னேற்றம் இருக்காது. பொறுமையை கடைபிடிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பேச்சில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். இருப்பினும் குருபலம் கூடியுள்ளது. சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் திருமணம் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பெண்களால் தொல்லைகள் உண்டு. எச்சரிக்கை. தொழிலதிபர்களுக்கு பெண்களால் தொல்லைகள் உண்டு. எச்சரிக்கை. கலைஞர்களுக்கு பேச்சில் கவனமும் நிதானமும் தேவை. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு குடும்பத்தில் வாக்குவாதங்கள் ஏற்பட்டு விலகும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிறு, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இருந்தாலும் பாஸ்கர யோகம் ஏற்பட்டுள்ளது. பேச்சில் கவனம் தேவை. அவசர ஆத்திர பேச்சுகளை தவிர்க்கவும். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. கடல் வாணிபம் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் குடும்ப பிரச்னையால் பாதிக்கப்படுவார்கள். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சிவவாக்கிய சித்தர், கம்பளி சட்டை முனி சித்தர், திங்கள்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ சக்ர மகாமேரு, திங்கள்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம்,

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 3-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராசியிலேயே ராகு இருப்பதால் மனக்குழப்பம் ஏற்படும். வியாபாரிகள் தொழில்அதிபர்களுக்கு மருத்துவ செலவுகள் ஏற்படும். கலைஞர்கள் ஆடம்பர செலவுகளை குறைப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பணியாள்களுக்கு திடீர் நல்ல செய்தி வரும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உடல்நலத்தில் கவனம் தேவை. சில அன்பர்களுக்கு அறுவை சிகிச்சை ஏற்படலாம். வியாயாரிகள் தொழில்அதிபர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய மனை வாங்கும் யோகம் உண்டு. மாணவர்களுக்கு நல்ல தகவல் வரும். விவசாயிகள் அரசாங்கத்தால் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளின் சூழ்ச்சி தெரிகிறது. எச்சரிக்கை! பணியாளர்களுக்கு புதிய முயற்சி வெற்றி தரும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டை முனி சித்தர், குதும்பை சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜூன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராசியிலுள்ள ராகு பகவான் வீண்குழப்பங்களை உருவாக்கவார். இனம் புரியாத கலக்கம் மனதில் ஏற்படும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சியில் வெற்றி பெறுவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் தேடி வரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு உடன்பிறப்புகளால் பிரச்சனை ஏற்பட்டு நீங்கும். பணியாளர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

## சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைந்து உள்ளார். குருவும் 3-ம் இடத்தில் மறைந்திருப்பதால் நினைத்த காரியம் நடப்பதில் தாமதம் தெரிகிறது. பணமுடக்கம் ஏற்படும். திருமணம் தீவிர முயற்சிக்கு பிறகு நடக்கும். வியாபாரிகள் தொழில் அதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் தகாத நட்பில் இருந்து விலக வேண்டும். விவசாயிகள் எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கு ஆளாவீர்கள் எச்சரிக்கை! அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத மருத்துவச்செலவு ஏற்படும். பணியாளர்களுக்கு மாத பிற்பகுதியில் சம்பள உயர்வு கிடைக்க பெறுவீர்கள். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 3-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார் உச்சம் அடைந்து சூரியன் பார்க்கிறார். பித்ரு ராஜித சொத்துகளால் ஆதாயம் உண்டு. சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் திருமணம் நடக்கும். காதல் கைக்கூடும். வியாபாரிகள் தொழில்அதிபர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும் எச்சரிக்கை! சின்னதிரை கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். மாணவர்கள் சற்று கவனத்துடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். விவசாயிகளுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு மருத்துவ செலவுக்கு இடமுண்டு. பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடித்தால் வெற்றி கிடைக்கும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பாஸ்கர யோகம் இருப்பதால் அறிவு கூர்மை மேம்படும். ஏற்றுமதி இறக்குமதி கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். அயல்நாட்டு பிரயாணம் மூலம் கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். சில மாணவர்கள் வெளிநாடு செல்வார்கள். கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாவார்கள். பணியாளர்கள் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருந்தால் தப்பிக்கலாம். பொதுவாக உடல் நலத்தில் கவனம் கொண்டால் இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். கணவன் மனைவி விட்டுகொடுத்து பழகுவது நலம். திருமண விஷயத்தில் அவசர முடிவு எடுக்க வேண்டாம். காதல் கைக்கூடும். தரகு வியாபாரம் செய்வர்கள் நஷ்டம் அடைவார்கள். தொழில் அதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். இசைக் கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகள் புதிய வாகனத்தை பயன்படுத்த வேண்டாம். பணியாளர்களுக்கு மேல் அதிகாரிகளால் தொந்தரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் நீச்சம் அடைந்துள்ளார். 2-ம் இடத்தில் குருபகவான் சஞ்சரிகிறார். பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவி விட்டுகொடுத்து பழகுவது நலம். திருமணத்தடை நீங்கும். காதல் கைக்கூடும். வியாபாரிகள் தொழில்அதிபர்களுக்கு உறவினர்களால் ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு புதிய வாகனம் கிடைக்கும். அர்த்தாஷ்டம சனியால் அரசியல்வாதிகளுக்கு பிரயாணத்தின்போது விபத்துக்கள் ஆகலாம் எச்சரிக்கை. பணியாளர்களுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், சனிக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 9ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். திருமண தடை நீங்கும். காதல் கைக் கூடும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். அர்த்தாஷ்டம சனியால் பாதிப்பு உண்டு. வீண் கலக்கம் அடைய வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு தொழிலில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரசியல்வாதிகளுக்கு குழந்தைகளால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு எதிர்பாராமல் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிகிறார். ஜென்மகுரு இருப்பதால் பண கலக்கம் மனக்கலக்கம் ஏற்படும். திருமணம் சற்று தாமதப்படும். காதல் விஷயத்தில் நிதானம் தேவை. வியாபாரிகள் தொழில்அதிபர்கள் பொருளாதாரத்தை திட்டமிட வேண்டும். கலைஞர்களுக்கு அயல்நாட்டு செய்தி ஆதாயம் கொடுக்கும். பொறியியல் மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவார்கள். விவசாயிகளுக்கு உடல்நலத்தில் கவனம் தேவை. அரசியல்வாதிகளுக்கு கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும். மாத பிற்பகுதியில் பணியாளர்களுக்கு இடமாற்றம் ஆகும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். நினைத்த காரியம் நிறைவேறும். நிதி நிலையில் நெருக்கடி தெரிகிறது. திருமண விஷயத்தில் அவசரம் காட்ட வேண்டாம். கணவன் மனைவி விட்டுக்கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள் தொழில்அதிபர்கள் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். கலைஞர்களுக்கு புதிய யுக்தியால் ஆதாயம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு பதவியில் நெருக்கடி ஏற்படும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடித்தால் தண்டனையில் இருந்து தப்பிக்கலாம். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் பாக்கியம் அடைந்துள்ளது. குருபலம் கூடியிருப்பதால் காதல் திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கவும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு ஏற்படும். அரசியல்வாதிகள் புதிய சொத்துகள் வாங்கும்போது கவனமாக இருக்கவும். பணியாளர்களுக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும்.பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் கவனமும் நிதானமும் தேவை. வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்படும். திருமணத் தடை நீங்கும். காதல் கைக்கூடும். குழந்தைகளால் பெற்றோர்களுக்கு ஆதாயம் உண்டு. வியாபாரிகள் தொழில் அதிபர்களுக்கு பொருள் சேசர்க்கை ஏற்படும். கலைஞர்கள் புதிய யுக்திகளை கையாண்டு ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் சிறு சிறு தடைகளை சந்தித்தாலும் மதிப்பெண் பெறுவார்கள். அரசியல்வாதிகள் பெண்களால் அவமானம் படுவார்கள். பணியாளர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல பலன்களே கொடுக்கும்.

*அ.எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிகிறார். சனியும் உடன் இருப்பதால் குழப்பம் எற்பட்டு நீங்கும். காதல் கைக்கூடும். கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். ஏழரை சனியின் பாதப்பு உண்டு வியாபாரிகள் தொழில்அதிபர்களுக்கு பணசெலவில் சிக்கனம் தேவை. கலைஞர்களுக்கு எதிர்பாராத பணம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டும். விவசாயிகளுக்கு பூர்விக சொத்துகளால் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். முன்வினை காரணமாக அரசியல்வாதிகளுக்கு பதவி பறிப்போகும். பரிகாரம் தேவை. பணியாளர்கள் அவசரப்பட்டு வேலையை மாற்ற வேண்டாம். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்து கேதுவோடு சம்பந்தப்பட்டுள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உள்ளது. சுபவிரைய ஸ்தானத்தில் குரு இருப்பதால் திருமண தடை நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு உடன் பிறந்தவர்களால் தொல்லை ஏற்படும். ஆகையால் கூட்டு வியாபாரத்தில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் பிரயாணத்தின்போது எச்சரிக்கயையாக இருக்கவேண்டும். விவசாயிகளுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகள் வீண் வாக்குறுதிகளை கொடுக்க வேண்டாம். பணியாளர்களுக்கு சிறு சிறு தடைகள்இருப்பதால் கவனம் ஆக பணியாற்றவும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உணர்ச்சிவசப்படாமல அவசரப்படாமல் இருந்தால் நல்ல பலன்களே நடக்கும். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பாராமல் வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தடை ஏற்பட்டாலும், நல்ல மதிப்பெண்களே பெறுவார்கள். விவசாயிகள் உடல்நலத்தில் கவனம் தேவை. மருத்துவ செலவு ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு பணியில் அங்கீகாரம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், சனிக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிகிறார். காதல் கைக்கூடும். திருமணம் நடக்கும். உணர்ச்சிவசப்படாமல் இருந்தால் கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள் தொழில்அதிபர்கள் புதிய முதலீடு செய்யும் யோகம் உண்டு. கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு பெண்களால் தொல்லை உண்டு எச்சரிக்கை. பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல் திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். ஏற்றுமதி இறக்குமதி கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய திருப்பத்தில் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பிரயாணம் உண்டு. பணியாளர்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரையம் பெற்றுள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு தெரிகிறது. 10ம் இடத்தில் இருக்கக்கடிய குருபகவான் அலைச்சல் எரிச்சலை கொடுத்தாலும் ஆதாயத்தையும் கொடுப்பார். திருமணத் தடை நீங்கும். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். ராஜயோகம் இருப்பதால் வெளிநாட்டு பிரயாணம் உண்டு. கலைஞர்கள் ஓரளவு ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள் அரசாங்க விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவ செலவுக்கு இடமுண்டு. பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வழக்கமான பணிகளை மேற்கொண்டால் போதும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியினால் பாதிப்பு தெரிகிறது, குடும்பத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பெற்றோர்களுக்கு குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும், காதல் திருமணத்திற்கு மாத கடைசியில் யோகம் உண்டு, கலைஞர்களுக்கு திடிர் திருப்பங்கள் ஏற்படும். மாணவர்கள் சற்று கவனத்துடன் படித்தால் மதிப்பெண்கள் பெறலாம். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி மாற்றம் ஏற்படும். பணியாளர்கள் இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சுமரான மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராசியில் அங்காரகன்உச்சம் அடைந்து கேதுவுடன் சம்பந்தப்பட்டுள்ளார். திருமண விஷயத்தில் அவசரம் காட்ட வேண்டாம். உணர்ச்சிவசப்ப்டு முடிவுகள் எடுக்கவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு வெளிநாட்டு பிரயாணத்தால் ஆதாயம் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். மாணவர்கள் பேச்சில் எச்சரிக்கையாக இருக்கவும். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு உண்டு. அரசியல்வாதிகள் எதிரிகளால் தாக்கப்படுவார்கள். எச்சரிக்கை. பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

*அ.எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், ஞாயிறு, ராகுகாலம், வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ராகுகாலம், ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல் விஷயத்தில் எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். ஏற்றுமதி இறக்குமதி கடல் வாணிபம் செய்பவர்கள். அதிக லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். சின்னதிரை கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. விவசாயிகளுக்கு சுபச்செய்தி வந்து சேரும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிகிறார். குருவும் நல்ல இடத்தில் இருக்கிறார். காதல் கைக்கூடும். திருமணதடை நீங்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். கலைஞர்கள் புதிய வாகனம் வாங்குவார்கள். மாணவர்களுக்கு சிறு சிறு தடை ஏற்பட்டு நீங்கும். விவசாயிகளுக்கு மகான்களின் ஆசிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் எதிரிகளின் சூழ்ச்சிகளில் மாட்டி கொள்வார்கள், எச்சரிக்கை! பணியாளர்களுக்கு திடிர் பணவரவு உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியிருப்பதால் திருமணம் தடை நீங்கும். காதல் கைக்கூடும்.கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. கலைஞர்களுக்கு புதிய தொழில் தொடங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் பெண்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும். பணியாளர்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, ராகுகாலம். சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்

(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)



**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டம குருவும் 10ல் சனியும் அனாவசிய கவலைகளை கொடுக்கும். கணவ்ன மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். திருமணத்தில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் விரிவாக்கம் செய்யாமல் இருப்பது நல்லது. கலைஞர்களுக்கு கடல் கடந்து செல்லும் யோகம் உண்டு. ராசியில் புதன் நீச்சம் அடைந்துள்ளார். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் பிரயாணத்தின்போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பணியாளர்களுக்கு கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும். நிதானம் தேவை. பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், வியாழக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி, 28ம் தேதி முதல் மே 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிகிறார். பொருளாதார முடக்கம் ஏற்படும். குழந்தைகளால் பெற்றோர்களுக்கு கவலை ஏற்படும். வியாபாரிகள் தொழில்அதிபர்கள் சற்று கவனத்துடன் இருக்க வேண்டும். பணம் களவு போகலாம் எச்சரிக்கை! கலைஞர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். மாணவர்கள் கடும் முயற்சி செய்தால் வெற்றி அடையலாம். விவசாயிகள் நெருக்கடிக்கு உள்ளாவார்கள். அரசியல்வாதிகளுக்கு பதவி மாற்றம் ஏற்படும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்கவும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அ.எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : வள்ளலார் சித்தர், இடைகாடர் சித்தர், புதன்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். மனகுழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம். நிதானத்தை கடைப்பிடிக்கவும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடல் வியாபாரத்தை தவிர்க்கவும். சின்ன திரை கலைஞர்களுக்கு லாபம் உண்டு. மாணவர்கள் கவனத்துடன் படித்தால் மதிப்பெண் பெறலாம். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். பணியாளர்களுக்கு பொருளாதார நெருக்கடி தெரிவதால் கவனம் தேவை. பொதுவாக பண விஷயத்தில் கவனமாக இருந்தால் இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அ.எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*



# "மகான்களின் ஒவ்வொரு செய்கையும் அர்த்தம் பொதிந்தவையே!"

# "மக்களை காலரா என்ற கொடி நோயின்று காப்பாற்றிய மகான்கள்"



ஷீரடி என்னும் கிரராமத்திலுள்ள மக்களை காலரா என்னும் நோய் வாட்டிவதைத்துக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் தனக்கென ஏதும் சேர்த்து வைத்துக் கொள்ளும் தன்மை இல்லாதவரும் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தவருமான ''சாய்பாபா'' கோதுமை மாவினை அரைப்பதற்காக அரைவைக் கல்லில் கோதுமையை இட்டு அரைத்துக் கொண்டிருந்தார். அளவுக்கு அதிகமான கோதுமை மாவினை ஏன் தயாரிக்கிறார்? எதற்காக பாபா தயாரிக்கிறார் என்று மக்கள் வினவிக் கொண்டனர். இடையில் நான்கு பெண்கள் அவரை விலகச் சொல்லி தொடர்ந்து மாவினை தயாரித்து மிக அதிகமாகவே சேகரித்து மகிழ்ந்து தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தனம்.

பெண்களே உங்களுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? யாருடைய அப்பன் வீட்டுப் பொருளை அபகரிக்கிறீர்கள். உங்களுக்கு கொடுக்க நான் என்ன கடன் பட்டிருக்கிறேனா? முதலில் இதை கொண்டு போய் கிராம எல்லைகளில் கொட்டி விட்டு வாருங்கள் என்று பாபா கூற பெண்களும் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டே பாபா குறிப்பிட்டபடி அங்கே மாவினை பரப்பி விட்டார்கள். இந்நிகழ்வு ஊரில் பரவிக் கொண்டிருந்த காலரா நோயில் இருந்து மக்களை காக்க பாபா செய்த பரிகாரமே ஆகும் என அவ்வூர் மக்கள் மகிழ்ச்சியுற்றனர். நோயிலிலிருந்து விடுபட்டு வாழ்ந்தனர்.

அதேபோல் நம் குருநாதரும் நம் தேசத்தை காலரா என்னும் கொடிய நோய் அரக்கன் மக்களின் உயிரைக் கொள்ளையாய் வீழ்த்திக் கொண்டிருந்த சமயத்தில் அக்கொடு நோய்க்கு மருந்தாக விஷத்தன்மையுடைய தடுப்பு விஷமருந்துகள் அடங்கிய சீசாக்கள் டிஸ்சர் போன்றவைகளை தனது வீட்டில் வைத்திருந்தார் சிறுவள்ளூர் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் வெங்கட சுப்பையர் அவருடைய வீட்டுக்கு எப்பொழுது வேண்டுமானாலும் செல்லக் கூடியவர். ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் திடீரென்று ஒருநாள் வேங்கடசுப்பையர் வீட்டிற்கு சென்று மருந்துகள் உள்ள அறையில் வைக்கப்பட்டிருந்த விஷமுள்ள மருந்துகளை குடித்து டிஸ்சர் பாட்டில்களை தலையில் தடவிக்கொண்டும் ஏப்பம் விட்டுக் கொண்டே வெளியேறினார். சுப்பையரும், மற்றவர்களும் அவருக்குள் சென்ற மருந்துகள் விஷத்தன்மை கொண்டவையே அவருக்கு தீங்கிழைக்குமே என்று புலம்பினார்.


''ஆலகால விஷத்தை உண்ட மகாதேவன் அருணாசலன் போல் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் வழக்கம் போல் திரிந்து கொண்டிருந்தார். விஷம் அவரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் வாட்டிஎடுத்த கொடிய காலராவை விரட்டி விரட்டி ஓடச் செய்தார் என்றால் பாருங்களேன்.

ஆம்! ஷீரடி சாய்பாபாவால் அரைக்கப் பட்டது கோதுமை அல்ல காலராவே ஆகும்.

சேஷாத்ரி சுவாமிகளும் விஷத்தன்மையுள்ள மருந்துகளை குடித்து காலரா எனும் கொடிய நோயை விரட்டியடித்தார். விஷத்தை உண்டு தேவர்களை காத்தார் அன்று மகாதேவன் விஷத்தன்மையுள்ள மருந்துகளை உண்டு காத்தார் மஹான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள். மகான்களின் ஒவ்வொரு செய்கைகளும் அர்த்தம் பொதிந்தவை என்பதை இந்நிகழ்ச்சியின் மூலம் அறியலாம்.

- ஜெயந்தி முரளி

## புதிர் போட்டி



கீழேயுள்ள வினாக்களைப் படித்து விடைகளை கட்டடங்களில் நிரப்புக

வினாக்கள்

1. ஸ்ரீ அழுகணி சித்தரை பூஜிக்க சிறந்த கிழமை....க்கிழமை.
2. ஸ்ரீ பட்டினத்தடிகளார் சித்தரை பூஜிக்க சிறந்த கிழமை......கிழமை
3. ஸ்ரீ வள்ளலார் சித்தரை பூஜிக்க சிறந்த கிழமை......கிழமை
4. ஸ்ரீ குதம்பை சித்தரை பூஜிக்க சிறந்த கிழமை......க்கிழமை
5. ஸ்ரீ அகப்பேய் சித்தரை பூஜிக்க சிறந்த கிழமை.......க்கிழமை
6. ஸ்ரீ மகா போகர் சித்தரை பூஜிக்க சிறந்த கிழமை......க்கிழமை.
7. ஸ்ரீ சிவவாக்கிய சித்தரை ......கிழமையில் பூஜித்தால் சிறந்த பலன் கிட்டும்.

- ஜெயந்தி முரளி

**புதிர்களின் விடைகள்**

1. சனி, 2. ஞாயிறு, 3. புதன், 4. வெள்ளி, 5. வியாழன். 6. செவ்வாய், 7. திங்கள்

திருமதி ஜெயந்தி முரளி

## பழகிப் பார்ப்போமா!

1. காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம்.
2. சத்தான உணவுகளை உட்கொள்வோம்.
3. சிரத்தையாய் பணி செய்வோம்.
4. முதியவர்களுடன் பேசி மகிழ்வோம்
5. பெற்றோர், பிள்ளைகளை பேணி வளர்ப்போம்.
6. பிள்ளைகள், பெற்றோர் சொல் கேட்டு வளர்வோம்.
7. பண்டிகைகளை கொண்டாடுவோம்.
8. பண்பாட்டினை பேணி வளர்ப்போம்!
9. வீண் வம்பை தவிர்ப்போம்'
10. வீதியெங்கும் தூய்மை காண்போம்.
11. வாரம் ஒருமுறையேனும் ஆலயம் செல்வோம்
12. தொண்டுள்ளமடன் தொண்டாற்றி மகிழ்வோம்.

- ஜெயந்தி முரளி

# சக்தி பீடத்தின் நிகழ்ச்சிகள்



வாராஹி அலங்காரம்



முருகன் அலங்காரம்



ஸ்ரீ ராம நவமி அலங்காரம்



ஸ்ரீ ஆஞ்சநேயர் சந்தான காப்பு அலங்காரம்

**ஜனவரி 9, 10 ஆகிய 2 தேதிகளில் மகான் சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை மிக சிறப்பாக நடைப்பெற்றது. இவ்விழாவில் வாராஹி ஹோமமும், சத்ரு ஸம்ஹார திரிசதி ஹோமமும் மிக விமரிசையாக நடைபெற்றது. அன்னதானமும் நடந்தேறியது. பக்தர்கள் கலந்துகொண்டு பலன் அடைந்தார்கள்.**

**மாடம்பாக்கம் ஸ்ரீ சித்தர் சக்தி பீடத்தில் ஸ்ரீ ராம நவமி விசேஷமாக நடைபெற்றது. ராமர், லட்சுமணன், ஆஞ்சநேயருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.**

## அர்த்தாஷ்டம சனி, ஏழரை சனி நடப்பதால் அன்பர்கள் இந்த சித்தரை வழிபட்டால் பலன் அடையலாம்

### பதினாறாம் சித்தர்

**ஸ்ரீ கபிலர் சித்தர்**

**தியானச் செய்யுள்**



பரமேஸ்வரன் மேல் பால் பொழிந்த
காமதேனு ஸ்வாமியே
இடைக்காட்டு பெருமானின்
இன்னலைத் தீர்த்த மின்னல் ஒளியே...
லிங்க பூஜையில் லயித்த சங்ககால சித்தரே
எம் சங்கடங்கள் தீர
உங்கள் சந்தனப்பாதம் பணிந்தோம்
காப்பீர் கபிலர் ஸ்வாமியே

**பதினாறு போற்றிகள்**

1. ஸ்ரீ விஷ்ணுப்ரியரே போற்றி!
2. ஸ்ரீ சுதர்ஸன சக்ரத்தை உடையவரே போற்றி!
3. ஸ்ரீ சங்கை பூஜிப்பவரே போற்றி!
4. அனாதைகளை காப்பவரே போற்றி!
5. ஒளிபொருந்தியவரே போற்றி!
6. புண்ணியத்தை அளிப்பவரே போற்றி!
7. த்ரிகால ஞானியே போற்றி!
8. ஓம் ராம் பீஜாட்சரத்தை உடையவரே போற்றி!
9. கௌஸ்துப மணிமாலை அணிபவரே போற்றி!
10. பீதாம்பரம் தரிப்பவரே போற்றி!
11. லட்சுமிப்ரியரே போற்றி!
12. அலங்காரப்ரியரே போற்றி!
13. ஸ்ரீ சுதர்ஸன சக்ரத்தை பூஜிப்பவரே போற்றி!
14. எதிரிகளை அழிப்பவரே போற்றி!
15. தீர்க்க சித்தரே போற்றி!
16. ஸ்ரீ விஷ்ணு அம்சம் உள்ள ஸ்ரீ கபிலர் சித்தர் ஸ்வாமியே போற்றி! போற்றி!

### பதினேழாம் சித்தர்

**ஸ்ரீ கருவூர் சித்தர் ஸ்வாமிகள்**

**தியானச் செய்யுள்**

கருவூரில் அவதரித்த மஹாஸ்தபதியே! திருக்
கலைத்தேரில் முடிதரித்த நவநிதியே!
வாரி வழங்கி அருள் கொடுத்தாய்
காறி உமிழ்ந்தும் துயர் எடுத்தாய்!
கல் உள்ளளவும் மண் உள்ளளவும் – உன்
கருணைக்கரங்களே காப்பு! காப்பு!



**பதினாறு போற்றிகள்**

1. சிவனே போற்றி!
2. சிவனை பூஜிப்பவரே போற்றி!
3. நாடி யோகியே போற்றி!
4. ஒளி பொருந்தியவரே போற்றி!
5. அவதார புருஷரே போற்றி!
6. இந்திராதி தேவர்களுக்கு ப்ரியரே போற்றி!
7. லோக க்ஷேம சித்தரே போற்றி!
8. குடத்தில் வசிப்பவரே போற்றி!
9. யோகமூர்த்தியே போற்றி!
10. ஓம் கம் நம் பீஜாட்சரத்தை உடையவரே போற்றி!
11. கற்பூரப்ரியரே போற்றி!
12. வேண்டியவரம் அளிப்பவரே போற்றி!
13. வெட்டை வெளியில் வசிப்பவரே போற்றி!
14. பூவுலகில் சஞ்சரிப்பவரே போற்றி!
15. கருவைக் காப்பவரே போற்றி!
16. ஞானத்தை அளிக்கும் ஸ்ரீ கருவூரார் சித்தர் ஸ்வாமியே போற்றி! போற்றி!

SRI SESHA OLI - R.Dis . No. 795/2006

# காரைகால் அம்மையார்

கி.பி. 400க்கு முன்பு ஒரு பங்குனி மாதம், சுவாதி நட்சத்திரத்தில் காரைக்கால் தலத்தில் "காரைக்கால் அம்மையார்" அவதரித்தார். இவர் மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவரும் மூத்தவருமாவார். அம்மையாரது இயற்பெயர் "புனிதவதி"யாகும். வணிக குலத்தில் பிறந்த இவர், சிறுவயதிலிருந்தே சிவபெருமான் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராக விளங்கினார். பின்பு 'பரமதத்தன்' என்னும் வணிகரை மணந்து, சிறந்த இல்லறம் பயின்று வந்தார்.



ஒரு சமயம் பரமதத்தன் கடையிலிருந்த பொழுது இரண்டு மாங்கனிகளை வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அவற்றை உள்ளே வைத்தப்பொழுது, ஒரு சிவனடியார் பசியுடன் உணவு வேண்டி அம்மையாரின் வீட்டு வாயிலில் வந்து நின்றார். உணவு தயாராகாததால், சிவனடியாரின் பசி தீர்க்க இரண்டு மாங்கனியில் ஒன்றை அம்மையார் அவருக்கு ஈந்தார். மிக்க மகிழ்ச்சியுடன் அதை உண்டு சிவனடியாரும் சென்றார். மதிய உணவு உட்கொள்ள வந்த கணவன் பரமதத்தனுக்கு, இல்லத்தில் மீதம் இருந்த ஒரு மாங்கனியை அம்மை பரிமாறினார். மாங்கனி மிகவும் சுவையாக இருக்கவே, மீதம் இருக்கும் ஒரு மாங்கனியையும் பரிமாறு என பரமதத்தன் கூறினார். திகைத்த அம்மையார், இறைவன் முன் சென்று செய்வதறியாது மனமுருகி இறைஞ்ச, அவர் கையில் ஒரு மாங்கனி விழுந்தது. அதை அன்புடன் கணவருக்கு அவர் பரிமாறினார்.

ஆனால் அதை சுவைத்த பரமதத்தன் இது முந்தைய மாங்கனியை விட பன்மடங்கு சுவையுள்ளதாகவும், அரியத்தன்மை வாய்ந்ததாகவும் இருப்பதற்கு காரணம் என்ன என்று வினவ, அம்மையார் நடந்த உண்மையை கூறினார். இதை நம்பாத பரமதத்தன், உண்மையில் ஈசன் இம்மாங்கனியை ஈந்தார் என்றால் இன்னும் ஒரு முறை அவரை வேண்டி ஒரு மாங்கனியை பெற்றுத்தா" என்றார். அம்மையும் மனமுருகி சிவபெருமானை வேண்டி, பரமதத்தன் கைகளில் ஒரு மாங்கனி விழுந்தது. இதைக் கண்டு வியந்த பரமதத்தன், தன் மனைவியை தெய்வப் பெண்ணாகக் கருதினார். தான் அவருக்குக் கணவனாக வாழத் தகுதியில்லாதவன் என எண்ணி பாண்டிநாடு சென்று, வேறு ஒரு பெண்ணை மணமுடித்தார். அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு அம்மையாரின் பெயரான "புனிதவதி" என்னும் நாமத்தை சூட்டினார்.

கணவனை காணாமல் கண்ணீர் சிந்திய புனிதவதியார், சில வருடங்கள் பிறகு உண்மை அறிந்தார், அதிர்ச்சியடைந்தார். அக்கணமே ஈசனை வேண்டி, "பேய் வடிவத்தை அடியேனுக்கு நற்பாங்கு பொருந்த அருளவேண்டும்" என்று இறைஞ்சினர். உடனே சிவபூதகண வடிவம் பெற்றார். கால் ஊன்றாமல் தலைகீழான நிலையில் கயிலை சென்ற அம்மையாரை கண்ட ஈசன், "அம்மையே வருக என்ன வரம் வேண்டும்" என்று கேட்க, அம்மையார், "பிறவாமை வேண்டும் அறவா நீ ஆடும்பொழுது தங்கள் திருப்பாதம் கீழ் நான் இருக்கவேண்டும்" என்று வேண்டினார்.

அதற்கு ஈசன், "திருவாலங்காட்டிற்கு வந்து, என் திருத்தாண்டவத்தைக் கண்டு, எனது திருவடிக் கீழ் இருக்க" என்று அருளினார்.

அம்மையாரும் அவ்வாறே செய்தார். திருவாலங்காட்டில் இறைவன் ஆடியதை பாடினபடியால், அவை "திருப்பதிகம்" என்று அழைக்கப்பெற்று, மூத்த பதிகங்களாக சிறப்புடன் பேசப்படுகிறது. அம்மையார் திருவாலங்காட்டில் தலையடியால் ஞானசம்பந்தர் அத்தலத்தில் கால் பதிக்கத் தயங்கினார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் அமர்ந்த கோலத்தினை கொண்டவர் "காரைக்கால்" அம்மையார் மட்டுமேயாவர். பக்திக்கும், சரணாகதிக்கும் சிகரமாக விளங்கிய இத்தெய்வீக சிரோன்மணியின் பாதம் பணிந்து, இவர் வணங்கிய ஈசன், நம் பதினொன் சித்தர் சக்திபீடத்தின் சதாசிவப் பலகையாக வீற்றிருப்பதை பக்தியுடன் வியந்து போற்றி வணங்கி, வாழ்வில் மேன்மை பெறுவோம்!

திருமதி உமாபரணி



முன்நோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒரு வேளை பின்நோக்கி வர நேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

உன்னால் சாதிக்க
இயலாத காரியம்
என்று எதுவும்
இருப்பதாக
ஒருபோதும்
நினைக்காதே!

- சுவாமி விவேகானந்தர்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

இலவச மருத்துவமனை செயல்படுகிறது.

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் நடைபெறுகிறது. வடை பாயசத்துடன் அன்னதானம் ரூ. 2500/- நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்




## ஸ்ரீ சேஷ ஒளி

நிர்வாக ஆசிரியர்

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. உமாபரணி

வடிவமைப்பு

புதிய அலுவலகம்
பழைய எண். 2/2, புதிய எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.



## ஹஸ்தின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மஹாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு சத்குரு பதினொன் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினொன் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. சத்குருவும் சக்தி பீடத்தின் மகிமையும்

## ஸ்ரீ சேஷ ஒளி விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |


Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.